**நான் முதல்வன் திட்டம் – உயர் கல்வி வழிகாட்டல்**

**உறுப்பினர் செயலாளரின் செயல்முறைகள், சென்னை – 06**

**திரு. இரா. சுதன், இ.ஆ.ப,இ (ஓ)**

**ந.க.எண் 98/ L1/நா.மு/2023 நாள்: .12.06.2023**

**பொருள்:** நான் முதல்வன் திட்டம் 2023-24 – அனைத்து அரசு மற்றும் அரசு உதவி பெறும் மேல்நிலைப் பள்ளிகளில் உயர்கல்வி வழிகாட்டல் - திட்டத்தினை நடைமுறை படுத்துதல் - வழிகாட்டு நெறிமுறைகள் வழங்குதல் – சார்ந்து

......

நடப்பு கல்வியாண்டில் "**நான் முதல்வன்**" திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசு மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கான உயர்கல்வி வழிகாட்டல் நிகழ்வுகள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

இதன் தொடர்ச்சியாக, நான் முதல்வன் திட்டம் - மாணவர்களுக்கான உயர்கல்வி வழிகாட்டி திட்டத்தினை **அனைத்து அரசு உதவி பெறும் மேல்நிலைப் பள்ளிகளிலும்** நடைமுறைப்படுத்திட திட்டமிடப்பட்டுள்ளது. 12ஆம் வகுப்பு முடித்த மாணவர்கள் மனதில் உயர்கல்வி தொடர்பாக பல கேள்விகள்/சந்தேகங்கள் எழும். இதற்கு, அந்தந்த 12 ஆம் வகுப்பு தேர்வு எழுதிய /எழுதாத, இடைநின்ற மற்றும் தேர்வு எழுதி தேர்ச்சி பெற்ற/பெறாத மாணவர்களுக்கு தகுந்த உயர்கல்வி ஆலோசனைகள் வழங்க வேண்டியுள்ளது. மாணவர்களை உயர்கல்விக்கு தயார் செய்வதும், விண்ணப்பிக்கச் செய்வதும் தற்போது நமது தலையாய கடமையாகும்.

**அரசு உதவி பெறும் பள்ளிகளின் தலைமை ஆசிரியர்கள்செய்ய வேண்டியவை:**

- 2022-2023 ஆம் கல்வியாண்டில், 12 ஆம் வகுப்பு மாணவர்களின் தேர்வு முடிவுகளுக்குப் பிறகு உயர்கல்வி குறித்த ஆலோசனை அமர்வுகளை ஏற்பாடு செய்தல்.
- பள்ளிகளில் **கல்லூரிக் கனவு** நிகழ்வுகள், மாணவர்களுக்கான பயிற்சிகளை ஒருங்கிணைத்தல்.
- மாணவர்களின் உயர்கல்வி ஆர்வத்தை அறிந்து கொண்டு அதற்குத் தகுந்தார் போல் ஆலோசனைகள் வழங்குதல்.
- மாணவர்களுக்கான வாட்ஸப் குழு (Whats App) உருவாக்கி கல்லூரிக் கனவு குறித்த தகவல்கள், கல்லூரி சேர்க்கை விவரங்கள் குறித்த தகவல்களைப் பகிர்தல்.

- உரிய ஆலோசனை வழங்குதல், கல்லூரி விண்ணப்ப படிவங்களை நிரப்புதல் மற்றும் உயர்கல்வியில் சேர்க்கையை உறுதி செய்தல்.
- **மாணவர்களின் கல்லூரி சேர்க்கை மற்றும் உயர்கல்வி தொடர தேவையான உதவிகள் சார்ந்த விவரங்களை பள்ளி Login வாயிலாக EMIS தளத்தில் பதிவேற்றம் செய்தல்.**
- மாணவர்களை தங்கள் அனுபவங்களை ஜூன் மாதம் இறுதியில் நடைபெறும் **கல்லூரிக் கனவு** மேடைகளில் பகிர்ந்து கொள்ளச் செய்தல்.
- உயர்கல்வி தொடர உதவிகள் தேவைப்படும் மாணவர்களைக் கண்டறிந்து மாவட்ட முதன்மை கல்வி அலுவலரிடம் அப்பட்டியலை வழங்கி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்துடன் இணைப்பதன் வாயிலாக சிறப்பு முயற்சிகள் மற்றும் நடவடிக்கைகள் மேற்கொள்ள உதவுதல்..
- மாணவர்கள் உதவித்தொகை பெற உதவி செய்தல்.

மேலே குறிப்பிட்டுள்ள வழிகாட்டுதல்களைப் பின்பற்றி, அனைத்து அரசு உதவி பெறும் மேல்நிலைப் பள்ளிகளிலும் உயர்கல்வி வழிகாட்டல் திட்டத்தினை செயல்படுத்திட வேண்டுமென அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். உடனடியாக EMIS தளத்தில் வெளியிட்டுள்ள மாணவர் தகவல் சேகரிப்பு படிவத்தை வருகின்ற **19.06.2023 க்குள்** பூர்த்தி செய்திட அனைத்து அரசு உதவி பெறும் மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரிசயர்களுக்கும் அறிவுறுத்திட மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**நான் முதல்வன்** திட்டத்தின் முதல் கட்டப் பணிகளை தொடங்கவிருக்கும் அனைத்து அரசு உதவி பெறும் மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசியர்களுக்கும் வாழ்த்துகள்.

உறுப்பினர் செயலாளர்

**பெறுநர்**

அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்,

**நகல் (முதன்மைக் கல்வி அலுவலர் வழியாக)**

1. மாவட்டக் கல்வி அலுவலர்கள் (மேல்நிலை), அனைத்து மாவட்டங்கள்.
2. அனைத்து வட்டார வளமைய மேற்பார்வையாளர்கள் - தொடர் நடவடிக்கைக்காக.
3. அனைத்து அரசு உதவி பெறும் மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் - தொடர் நடவடிக்கைக்காக.